SC.No. 138/18
PW – 9
06.02.2026
பெயர் : இங்கர்சால்
த/பெ. :

<u>குறுக்கு விசாரணை</u>

செல்வம் என்பவருக்கு மருத்துவ விடுவிப்பு சான்றிதழ் நான் வழங்கவில்லை. மேற்படி நபருக்கு சாதாரண காயம் என்று அவரை விடுவித்த மருத்துவர்தான் கருத்துரை வழங்கியுள்ளார். நான் கருத்துரை எதுவும் வழங்கவில்லை. மேற்படி செல்வம் என்பவருக்கு எடுக்கப்பட்ட நுண்கதிர்படத்தில் கண்டுள்ள எலும்பு முறிவு குறித்து நான் உறுதிபடுத்தவில்லை. மேற்படி செல்வம் என்ற நபரை மருத்துவ விடுவிப்பு செய்த மருத்துவர்தான் அது குறித்து உறுதிபடுத்தியுள்ளார். மேற்படி செல்வம் என்ற நபரை நான் புதுக்கோட்டை அரசு தலைமை மருத்துவமனையில் உள்நோயாளியாக மட்டும் அனுமதித்தேன்.

Sd/– இங்கர்சால்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.